# தமிழ்நாட்டில்

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

*பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது ஸ்தூல உடலில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யவில்லை. அந்தக் குறை, ஸ்ரீ சாரதாதேவியார் தமிழ்நாட்டிற்கு வருகைத் தந்ததன் மூலம் நீங்கியது என்று ஒருவாறு சொல்லலாம்.*

*சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக அப்போது சுவாமி ராமகிருஷ்ணானந்தர் இருந்தார்.*

*அன்னையார் தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்று நினைத்தவர் - அன்னையார் தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் பலமுறை அழைத்தவர் - சுவாமி ராமகிருஷ்ணானந்தர்.*

*ஒரிஸ்ஸா மாநிலத்தைச் சேர்ந்த கோத்தார் என்ற ஊரில் இருந்தபோது அன்னை, ‘‘என் மாமனார் (ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தந்தை க்ஷுதிராம்) ராமேஸ்வரம் சென்று தரிசனம் செய்திருக்கிறார். நானும் அங்கு சென்று தரிசனம் செய்ய விரும்புகிறேன்’’ என்று கூறினார்.*

*அதைத் தொடர்ந்து சுவாமி ராமகிருஷ்ணானந்தர், அன்னை தென்னிந்தியாவிற்கு வருவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளையும் வசதிகளையும் மிகவும் மகிழ்ச்சியுடன் செய்தார்.*

*அன்னை, சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் அழைப்பின் பேரில், 1911-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் நடுவில் சென்னைக்கு வந்தார்.*

*அன்னையை வரவேற்பதற்காக ராமகிருஷ்ணானந்தர், சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்தர்கள் பலருடன் சென்றிருந்தார்.*

*சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து, மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு அன்னையை அழைத்து வருவதற்காக, ராமகிருஷ்ணானந்தர் ஒரு மோட்டார் கார் ஏற்பாடு செய்திருந்தார்.*

*அன்றைய தினம் வெயில் கடுமையாக இருந்தது. அதனால் வெயில் காரணமாக, அந்த மோட்டார் காரிலிருந்த இருக்கைகள் சூடாகிவிட்டன.*

*ராமகிருஷ்ணானந்தர் தன்னுடைய அங்கவஸ்திரத்தை அருகில் இருந்த குழாய் தண்ணீரில் நனைத்து எடுத்து வந்து, காரின் இருக்கைகளைத் துடைத்து அவற்றைக் குளிர்ச்சி பெறும்படி செய்தார்.*

### சென்னையில் ஸ்ரீ அன்னையார்

*அன்னை வந்த ஹவ்ரா - மெட்ராஸ் மெயில், நண்பகல் நேரத்தில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தது. அங்கு அன்னையை,*

*ராமகிருஷ்ணானந்தரும் சென்னையைச் சேர்ந்த பக்தர்களும் ஜெயகோஷம் செய்து, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள்.*

*பின்னர் அங்கிருந்து அன்னையையும் அவருடன் வந்தவர்களையும், ராமகிருஷ்ணானந்தர் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு அழைத்துச் சென்றார்.*

*அன்னையின் இந்த யாத்திரை குழுவில் பிரம்மசாரி சுகுல், பிரம்மசாரி கிருஷ்ணலால், கோலாப்மா, ராது, சுரபாலா, பலராம்போஸ் குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் வந்திருக்கிறார்கள்.*

*அன்னையும் அவருடன் வந்த பெண் பக்தைகளும் தங்குவதற்கு, மடத்திற்கு அருகிலுள்ள 'சுந்தர் நிவாஸ்' என்ற வீட்டை ராமகிருஷ்ணானந்தர் ஏற்பாடு செய்திருந்தார்.*

*இந்த வீடு இரண்டு மாடி கட்டிடமாகும்.*

*அன்னையார் தன் குழுவினருடன் இந்த 'சுந்தர் நிவாஸ்' வீட்டில் சுமார் ஒரு மாதம் தங்கினார்.*

*(அன்னை தங்கிய 'சுந்தர் நிவாஸ்' என்று வீடு இருந்த இடத்தில் பிறகு வேறு ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இப்போது 'ஸ்ரீநிவாச இல்லம்' என்று அழைக்கப்படும் இந்தக் கட்டிடத்தில், 'தி சென்னை சென்ட்ரல் கோவாப்ரடிவ் பேங்க், புதிய எண்:110 (பழைய எண்:221) ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை 600 004 என்ற முகவரியில் இயங்கி வருகிறது.)*

*'சுந்தர் நிவாஸ்' வீட்டிலிருந்து அருகில் உள்ள மடத்திற்குச் சென்று, பூஜையறையில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை வழிபடுவது அன்னைக்குச் சுலபமாக இருந்தது.*

*'சுந்தர் நிவாஸ்' வீட்டில் இருந்தபோது அன்னை, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கும் சென்று வழிபட்டார்.*

*சுந்தர் நிவாஸிலிருந்த அன்னையைத் தரிசிப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண், பெண் பக்தர்கள் வந்தார்கள். அவர்களுடன் அன்னை இடையில் ஒரு மொழிபெயர்ப்பாளரின் துணையுடன் பேசினார்.*

*சென்னையில் அன்னை பலருக்கு மந்திரதீட்சையும் வழங்கினார். மந்திரதீட்சை சமயத்தில் அன்னை மொழிபெயர்ப்பாளர் எவரையும் தன்னுடன் வைத்துக்கொள்ளவில்லை.*

*பிறர் உள்ளத்தை மிகவும் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடியவர் அன்னை. அதனால்தான் அவர், மந்திரதீட்சை சமயத்தில் மொழிபெயர்ப்பாளரின்*

உதவியின்றியே, தான் சொல்ல வந்த கருத்துக்களைச் சீடர்களின் உள்ளத்தில் நன்கு பதியும்படி செய்தார்.

தன்னிடம் மந்திரதீட்சை பெற்ற ஒரு குடும்பத்தினரின் அழைப்பின் பேரில், அவர்கள் வீட்டிற்கு அன்னை சென்று ஒருநாள் உணவருந்தினார்.

ஒரு முறை கல்கத்தாவில் இருந்தபோது அன்னை தன் சீடர் ஒருவரிடம், ''சென்னையில் நிறைய பெண்கள் என்னை வந்து பார்த்தார்கள். அந்தப் பகுதியில் உள்ள பெண்கள் நன்கு படித்தவர்களாக இருக்கிறார்கள். என்னை அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும்படி கேட்டார்கள். நான் அவர்களிடம், 'எனக்குச் சொற்பொழிவு செய்ய தெரியாது' என்று கூறினேன். கௌரீமா என்னுடன் சென்னைக்கு வந்திருந்தால், அவள் அங்கு பெரிய சொற்பொழிவு செய்திருக்கலாம்'' என்று கூறினார்.

ஒரு நாள் பள்ளி மாணவிகள் ஒரு குழுவாக வந்து, சுந்தர் நிவாஸில் அன்னையைத் தரிசித்தார்கள். அன்னை அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்தார். அந்த மாணவிகள் அன்னையின் முன்னால் அமர்ந்து தமிழ் பாடல்கள் பாடி, வயலின் வாசித்தார்கள். மாணவிகளின் தமிழ் பாடல்களையும், வயலின் இசையையும் கேட்டு அன்னைப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்.

சென்னையிலுள்ள மெரினா கடற்கரை, கோட்டை ஆகிய இடங்களை அன்னை சென்று பார்த்தார்.

சென்னை கடற்கரையிலுள்ள மீன்காட்சியகத்தையும் அன்னை சென்று பார்த்தார். அப்போதுதான் துவக்கப்பட்ட மீன்காட்சியகத்தின் கட்டிடப் பணிகள், அன்னை அங்கு சென்றபோது முற்றுப் பெறாத நிலையில் இருந்தன.

அன்னை தமது வாழ்க்கையில் முதல் முறையாகச் சென்னையில்தான் சைக்கிள் ரிக்ஷாவில் பயணம் செய்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மறுவடிவம்தான் அன்னை. அன்னையின் மறுவடிவம்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இவர்கள் இருவரும் ஒருவரே என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பக்தர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

ராமகிருஷ்ணானந்தர், பூஜை விஷயத்தில் சிறிதும் தவறாமல் விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்றியே ஆக வேண்டும் என்பதில் மிகவும் உறுதியானவர்.

அத்தகைய ராமகிருஷ்ணானந்தர், ஸ்ரீகுருதேவரைப் பூஜிப்பதற்கு உரிய பூஜை பாத்திரங்களை அன்னை உபயோகிப்பதற்குக் கொடுத்தார். ஆனால் அன்னை அந்தப் பூஜை பாத்திரங்களில் ஒரு டம்ளரை மட்டும், தான் தண்ணீர் குடிப்பதற்குப் பயன்படுத்தினார். அன்னை அந்த டம்ளரைச் சுட்டிக் காட்டி, ''இந்த டம்ளரை ஸ்ரீ குருதேவர் பூஜைக்குப் பயன்படுத்த வேண்டாம்'' என்று

ராமகிருஷ்ணானந்தரிடம் கூறினார். ராமகிருஷ்ணானந்தரும் அன்னை கூறியதை அப்படியே ஏற்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அண்ணன் மகன் ராம்லால். அவர் ராமேஸ்வரம் செல்லும் பொருட்டு கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்தார்.

அன்னையும் அவரது குழுவினரும், இரண்டாம் வகுப்பு ரயில்பெட்டியில் சென்னையிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டார்கள். ராமகிருஷ்ணானந்தரும், ராம்லாலும், அன்னையின் பாதுகாவலர்களாக அன்னையின் குழுவினரோடு பிரயாணம் செய்தார்கள்.

## மதுரையில் அன்னையார்

சென்னையில் இரவு புறப்பட்ட ரயில் மறுநாள் காலையில் மதுரை சென்றடைந்தது.

ராமகிருஷ்ணானந்தரின் யோசனையின் பேரில், மதுரை நகரசபைத் தலைவர் வீட்டில் அன்னை தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மதுரை, மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அன்னை சென்றார். மீனாட்சி கோயிலில் ‘பொற்றாமரைக் குளம்’ என்று அழைக்கப்படும் ‘சிவகங்கை தீர்த்தம்’ இருக்கிறது. அன்னை விதிமுறைப்படி பொற்றாமைரைக் குளத்தில் நீராடினார்.

பின்னர் மீனாட்சி சன்னதிக்கும், சுந்தரேஸ்வரர் சன்னதிக்கும் சென்று அன்னை வழிபாடு செய்தார்.

அதன்பிறகு அன்னை மீண்டும் பொற்றாமரைக்குளத்திற்குச் சென்றார். அங்கு அவர் தன்னுடன் வந்தவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லி, அகல்விளக்குகள் ஏற்றிப் பொற்றாமரைக் குளத்தின் கரையில் வைத்தார். அன்னையைப் பின்பற்றி அவருடன் வந்தவர்களும் அப்படியே செய்தார்கள்.

அன்னை பொற்றாமரைக் குளத்தில் மலர்கள் அர்ப்பித்து வழிபட்டார்.

திருமலைநாயக்கர் மஹால், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் நடுவில் இருக்கும் மண்டபம் அகிய இடங்களுக்கு அன்னை தன் குழுவினருடன் சென்று பார்த்தார்.

தெப்பக்குளத்தையும் அதன் நடுவில் இருக்கும் மண்டபத்தையும் பார்த்து அன்னை, ‘‘ஆகா! இறைவன்தான் என்னென்ன அற்புத லீலைகள் செய்திருக்கிறார்!’’ என்று பிரமிப்புடன் கூறினார்.

## ராமேஸ்வரத்தில் அன்னையார்

மதுரையில் அன்னையின் குழுவினர் ஒருநாள் இருந்துவிட்டு, மறுநாள் ரயிலில் ராமேஸ்வரத்திற்குச் சென்றார்கள்.

அவர்கள் ராமேஸ்வரம் சென்றபோது இரவு ஆகியிருந்தது.

அவர்கள் அனைவரும் ராமநாதசுவாமி கோயில் அருகில் சென்றபோது, இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது. ஆதலால் அப்போது கோயில் கதவுகள் மூடியிருந்தன. எனவே அவர்கள் கோயிலுக்கு வெளியிலிருந்து கோயில் கோபுரத்தையும், கோயிலையும் வணங்கிவிட்டு, அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

அப்போது பாஸ்கர சேதுபதி ராமநாதபுரத்தின் அரசராக இருந்தார். அவர் சுவாமி விவேகானந்தரின் சீடர். ராமநாதசுவாமி கோயில், பாஸ்கர சேதுபதியின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தது.

பாஸ்கர சேதுபதி, தன் குருவினுடைய குருவின் மனைவியான அன்னையின் வருகையைத் தந்தி மூலம் முன்னதாகவே ராமநாதசுவாமி கோயில் நிர்வாகிகளுக்குத் தெரிவித்திருந்தார்.

மன்னர் பாஸ்கர சேதுபதி, ராமேஸ்வரத்தில் அன்னையும் அவரது குழுவினரும் தங்குவதற்கும், கோயில் தரிசனம் செய்வதற்கும் பெரிய அளவில் விரிவான ஏற்பாடுகள் செய்திருந்தார்.

(ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலுக்கு அருகில் ராமநாதபுரம் அரசருக்குச் சொந்தமான விருந்தினர் விடுதி இருந்தது. இந்த விடுதியில் அன்னை தன் குழுவினருடன் தங்கினார். இந்த விடுதியில்தான் அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது சுவாமி விவேகானந்தரும் தங்கினார். இப்போது ராமநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான இந்த விடுதி 'விவேக பாஸ்கரம்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.)

மறுநாள் அன்னை சம்பிரதாய முறையில் கடலில் நீராடி, கோபுர தரிசனம் செய்து கோயிலுக்குச் சென்றார்.

ராமநாத சுவாமி கோயில் கருவறைக்குள் அர்ச்சகர்களைத் தவிர, வேறு எவரையும் அனுமதிக்கும் வழக்கமில்லை. இந்த விதி மன்னர் பாஸ்கர சேதுபதி செய்திருந்த விசேஷ ஏற்பாட்டின் பெயரில் அன்னையின் விஷயத்தில் தளர்த்தப்பட்டது.

அதனால் கோயில் நிர்வாகிகள் அன்னையை மட்டுமின்றி, அவரது குழுவினரையும் விசேஷமாக உபசரித்து கருவறைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

*அங்கு எப்போதும் ராமநாதசுவாமிக்குத் தங்ககவசம் அணிவித்திருப்பது வழக்கம். கவசத்துடன்தான் அங்கு சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.*

*ராமர் ராவண யுத்தம் முடிந்த பிறகு, ராமர் இந்த இடத்தில் மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்டார். (சீதைதான் கடற்கரை மணலால் சிவலிங்கம் செய்து வைத்தாள். அதை ஸ்ரீ ராமர் வழிபட்டார் என்றும் ஒரு வரலாறு உண்டு.) அதனால் இங்குள்ள இறைவனுக்கு 'ராமநாதன்' என்ற பெயரும், இந்தத் தலத்திற்கு 'ராமேஸ்வரம்' என்ற பெயரும் ஏற்பட்டது.*

*கோயில் நிர்வாகிகள் அன்னையிடம், "நீங்களே உங்கள் கையால் ராமநாதசுவாமியைத் தொட்டு அபிஷேகம், அர்ச்சனை செய்யலாம்" என்று தெரிவித்தார்கள்.*

*அன்னை தன்னுடன் கல்கத்தாவிலிருந்து கொண்டு வந்திருந்த கங்கை நீரால், ராமநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்ய விரும்பினார். அதனால் அன்றைய தினம் கோயில் அர்ச்சகர்கள் ராமநாதசுவாமிக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்கக் கவசத்தை அகற்றினார்கள்.*

*அன்னை கவசத்தால் மூடப்படாத சிவலிங்கத்திற்கு கங்கை நீரால் அபிஷேகம் செய்து, மலர்கள் சமர்ப்பித்து வழிபட்டார். மேலும் அன்னை, தங்கத்தாலான 108 வில்வதளங்களைக் கொண்டு ராமநாத சுவாமிக்கு அர்ச்சனை செய்தார். (இந்த 108 பொன் வில்வ இலைகளை அன்னை, ராமநாதசுவாமியைப் பூஜிக்கும் பொருட்டு ராமகிருஷ்ணானந்தர் அன்னைக்குச் செய்து கொடுத்திருந்தார்.)*

*கவசம் அகற்றப்பட்ட சிவலிங்கத்தைப் பார்த்ததும், அன்னை தன்னை மறந்த நிலையில், "அன்றைக்கு நான் வைத்துவிட்டுச் சென்றது போலவே இருக்கிறது" என்று கூறினார். இவ்விதம் கூறிய உடனே அன்னை துணுக்குற்றவராய் அக்கம்பக்கம் பார்த்துவிட்டு, "பொருளற்ற வார்த்தைகள் எல்லாம் இப்போது என் வாயிலிருந்து வெளிவருகின்றன" என்றார். ஆனால் அன்னை இவ்விதம் கூறியது, அருகில் நின்றிருந்த பிரம்மசாரி கிருஷ்ணலாலின் காதுகளில் விழுந்துவிட்டது.*

*இந்த நிகழ்ச்சி நடந்த சில மாதங்களுக்குப் பிறகு, கல்கத்தா உத்போதனில் இருந்த அன்னையைத் தரிசிப்பதற்கு கேதார்பாபு வந்திருந்தார். கோல்பாராவைச் சேர்ந்த அன்னையின் சீடரான அவர், அன்னையின் ராமேஸ்வர யாத்திரையைப் பற்றி கேட்டார். அப்போதும் அன்னை தன்னை மறந்த தெய்விக நிலையில் மூழ்கியபடி, "மகனே! முன்பு நான் வைத்துவிட்டு சென்றது போலவே, சிவலிங்கம் இப்போதும் அங்கு இருக்கிறது" என்றார்.*

*அந்த நேரத்தில் அன்னையைக் கடந்து, கோலாப்மா அந்தப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தார். கோலாப்மாவின் கூர்மையான காதுகளில் அன்னை*

கூறிய சொற்கள் விழுந்தன. உடனே அவர், அன்னையின் இந்தச் சொற்களில் அடங்கியிருக்கும் உட்பொருளைப் புரிந்துகொண்டார். ஆதலால் அவர் வெளியே சென்று, ''அன்னை தன்னையும் மீறிய நிலையில் கூறிய இந்த வார்த்தைகளால் அவர், தான் யார் என்பதைத் தானே வெளிப்படுத்திவிட்டார்'' என்று எல்லோருக்கும் சொல்ல ஆரம்பித்தார்.

''முன்பு நான் வைத்துவிட்டு சென்றது போலவே, சிவலிங்கம் இப்போதும் அங்கு இருக்கிறது'' என்று அன்னை கூறியதற்கு, கோலாப்மா பின்வருமாறு விளக்கம் கூறினார்:

''ராமாவதாரத்தில் அன்னை சீதையாக அவதரித்தார். இலங்கைப் போர் முடிந்து ராமரும் சீதையும் இந்தியா திரும்பியபோது, கடற்கரை மணலால் ராமர் சிவலிங்கம் உருவாக்கி சிவபெருமானை வழிபட்டார். அப்போது அன்னையாகிய சீதையும் அருகில் இருந்தார். இந்த சிவலிங்கத்தைச் சுற்றியே இப்போது இருக்கும் பெரிய கோயில் பிற்காலத்தில் எழுந்தது. ராமர் உருவாக்கிய சிவலிங்கம் கடற்கரை மணலால் உருவாக்கப்பட்ட சிவலிங்கமாகும். அதனால்தான் அதற்குப் பொன் கவசம் அணிவிக்கப்பட்டே அபிஷேகம் போன்றவை இப்போதும் நடைபெற்று வருகின்றன. வெறுமனே இருக்கும்போதும் கூட இந்த சிவலிங்கத்திற்குக் கவசம் அணிவிக்கப்பட்டே இருக்கிறது. கவசம் கழற்றப்பட்ட நிலையில் இப்போது அன்னை இந்தச் சிவலிங்கத்தைப் பார்த்ததும், தன்னுடைய முந்தைய அவதார நினைவுகள் அவரது மனதில் பளிச்சிட்டிருக்கின்றன. அதனால்தான் அன்னை, 'நான் விட்டுச் சென்றது போலவே சிவலிங்கம் இப்போதும் அங்கு இருக்கிறது என்று கூறினார்' - இப்படியெல்லாம் கோலாப்மா விளக்கம் கூறுவதைக் கேட்ட அன்னை, ''என்ன இது! நான் சிவலிங்கத்தைப் பார்த்தபோது எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைத்தான் அப்படி சொன்னேன். அதற்குப் போய் இப்படியெல்லாம் கதைக் கட்டிக்கொண்டிருக்கிறாயே!'' என்று கூறி, தான் பேசிய சொற்களின் பொருளை மறைக்க முற்பட்டார்.

ராமேஸ்வரத்தில் அன்னை மூன்று நாட்கள் தங்கினார். அன்னை ராமேஸ்வரத்திலிருந்த மூன்று நாளும் காலை, மாலை ஆகிய இரண்டு வேளையும் கோயில் கருவறைக்குள் சென்று ராமநாத சுவாமியையும், பர்வதவர்த்தினியையும் வழிபட்டார்.

மூன்றாம் நாள் அன்னை, கோயிலில் பணி புரியும் அர்ச்சகர்கள் எல்லோருக்கும் சம்பிரதாய முறையில் விருந்து வைத்தார். அதோடு அன்னை, அந்த அர்ச்சகர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தீர்த்த (பஞ்ச) பாத்திரத்தையும் தானமாக வழங்கினார்.

அன்னை காசியில் இருந்தபோது, காசி தலத்தின் மகிமையைப் பற்றி கூறும் 'காசி கண்டம்' என்ற நூலைப் படிக்கச் சொல்லி கேட்டார். இப்போது இந்த

ராமேஸ்வர யாத்திரையின்போது அவர், 'ராமேஸ்வர ஸ்தல மகாத்மியம்' படிக்கச் சொல்லிக் கேட்டார்.

இந்த ஸ்தல மகாத்மியம் படிக்கச் சொல்லிக் கேட்கும் சமயத்தில், கையில் தாம்பூலம், (வெற்றிலையும் பாக்கும்) வைத்திருக்க வேண்டும் என்றும், 'ராமேஸ்வர தல மாகாத்மியம்' படித்து முடித்த பிறகு - அதைப் படித்தவருக்குக் கையில் அது வரையில் வைத்திருந்த தாம்பூலத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்றும் ஓர் ஐதீகம் - ஒரு சம்பிரதாயம் நிலவுகிறது. அன்னை இந்தச் சம்பிரதாயத்தைப் பெரிதும் பக்தியுடன் அப்படியே பின்பற்றினார்.

ராமநாதபுர அரசர் செய்திருந்த ஏற்பாட்டின்படி கோயில் நிர்வாகிகள், கோயில் ஆபரணங்களையும் கஜானாவையும் அன்னைக்குக் காட்டினார்கள்.

மேலும், அரசரின் உத்தரவின் பேரில் கோயில் அதிகாரிகள் அன்னையிடம், "இந்த ஆபரணங்களில் நீங்கள் எதையாவது விரும்பினால், அதை உடனே உங்களுக்குத் தரும்படி அரசர் எங்களுக்கு உத்திரவிட்டிருக்கிறார்" என்றும் கூறினார்கள்.

அதற்கு அன்னை, ''இதெல்லாம் எனக்கு எதற்கு? என் தேவைகளை எல்லாம் சசி (சுவாமி ராமகிருஷ்ணானந்தர்) கவனித்துக்கொள்கிறார்'' என்று பதிலளித்தார்.

எனினும் கோயில் அதிகாரிகள் அன்னையிடம், "அரசரின் விருப்பத்திற்காகவாவது, இவைகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள்.

அன்னைக்கு அந்த நகைகள் எதன் மீதும் சிறிதும் விருப்பம் தோன்றவில்லை. எனினும், கோயில் அதிகாரிகளின் வேண்டுகோளை அறவே புறக்கணித்து கஜானாவிலிருந்து ஆபரணம் எதையும் எடுத்துக் கொள்ளாவிட்டால், அது மரியாதைக் குறைவாக இருக்கக் கூடுமோ என்று அன்னை அஞ்சினார். மேலும் அன்னை எந்த ஓர் ஆபரணத்தையும் எடுத்துக்கொள்ளாவிட்டால் கோயில் அதிகாரிகள் நிச்சயம் மனம் வருந்துவார்கள் என்பதால், அன்னை தன்னுடன் இருந்த ராதுவை அவர்களிடம் காட்டி, "இவள் என் அன்பிற்குரிய குழந்தை. இவளுக்கு ஏதாவது வேண்டுமானால் கொடுங்கள்" என்று கூறினார்.

பிறகு ராதுவிடம் அன்னை, ''அவர்கள் காட்டுவதில் உனக்கு விருப்பமானதை நீ எடுத்துக்கொள்'' என்று கூறினார்.

கோயில் அதிகாரிகள் ராதுவுக்குக் கஜானாவிலிருந்து வைரம், வைடூரியம், மாணிக்கம், நவரத்தினங்கள் போன்றவற்றால் ஆன தங்க ஆபரணங்களை ஒவ்வொன்றாகக் காட்டியபடியே, அவற்றில் ராதுவுக்குப் பிடித்ததை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள்.

*அங்கு காட்டப்பட்ட விலை உயர்ந்த தங்க ஆபரணங்களைப் பார்த்ததும், அன்னையின் இதயம் பயத்தால் வேகமாகத் 'திக், திக்' என்று அடித்துக்கொண்டது.*

*உடனே அன்னை, 'ஐயோ! இந்த ஆபரணங்களை எல்லாம் இவள் எடுத்துக்கொள்ளக் கூடாதே!' என்று நினைத்து, மிகவும் பரபரப்போடு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம், ''பகவானே! ராதுவுக்கு இந்த நகைகள் எதன் மீதும் ஆசை ஏற்பட்டுவிடக் கூடாது. அவள் இவைகளில் எதையும் எடுத்துக்கொள்ளக் கூடாது'' என்று பிரார்த்தனை செய்தார்.*

*இந்தப் பிரார்த்தனைக்குப் பிறகு என்ன நடந்தது என்பதை அன்னை இவ்விதம் கூறியுள்ளார்:*

*''நீண்ட நேரம் ஒவ்வொரு நகையாகப் பார்த்து வந்த ராது, கடைசியில் 'இவையெல்லாம் எனக்கு வேண்டாம்' என்றும், 'தொலைந்துபோன என்னுடைய பென்சிலுக்குப் பதிலாகப் புதிய ஒரு பென்சில் வாங்கிக் கொடுங்கள்' என்றும் கேட்டாள். அதைக் கேட்ட பிறகுதான் நான் ஆழ்ந்த நிம்மதி பெருமூச்சு விட்டேன். கோயிலை விட்டு வெளியே வந்ததும், ஒரு கடையில் அரையணாவிற்கு அவளுக்கு ஒரு பென்சில் வாங்கிக் கொடுத்தேன்'' என்று அன்னை கூறியுள்ளார்.*

*ராமேஸ்வரத்திலிருந்து 16 கி.மீ தூரத்திலுள்ள திருத்தலம் தனுஷ்கோடி. இங்குதான் ஸ்ரீ ராமர் இலங்கைச் செல்வதற்குப் பாலம் கட்டினார் என்பது வரலாறு.*

*ராமேஸ்வரம் செல்லும் யாத்திரிகர்கள், தனுஷ்கோடிக்கும் சென்று தங்கத்தில் செய்யப்பட்ட அல்லது வெள்ளியில் செய்யப்பட்ட சிறிய வில்லையும் அம்பையும் கடலில் சமர்ப்பித்து வழிபடுவார்கள்.*

*தனுஷ்கோடிக்கு அன்னையால் செல்ல இயலவில்லை. எனினும் அன்னை ராமேஸ்வரத்தில் நிலவும் வழக்கத்தையொட்டி, இரண்டு சீடர்களை தனுஷ்கோடிக்கு அனுப்பி, தன் சார்பாக வெள்ளியில் செய்யப்பட்ட சிறிய வில்லையும் அம்பையும் கடலில் கணிக்கையாகச் சமர்ப்பித்து வழிபடச் செய்தார்.*

*ராமேஸ்வரத்திலிருந்து அன்னையின் குழுவினர் மீண்டும் மதுரைக்கு வந்து ஒரு நாள் தங்கினார்கள். பின்னர் அவர்கள் மதுரையிலிருந்து ரயில் மூலம் சென்னைக்குத் திரும்பினார்கள்.*

*அன்னை சென்னைக்குத் திரும்பிய சில நாட்களில், 1911-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஜெயந்தி விழாவில் அன்னை மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டார். அதோடு அன்றைய தினம்*

*அன்னையிடம் சிலர் மந்திரதீட்சையும் பெற்றார்கள். சில நாட்களுக்குப் பிறகு, 1911-ஆம் ஆண்டு மார்ச் மாத கடைசியில் அன்னை பெங்களூர் சென்றார்.*

*அன்னைக்குப் பாதுகாவலராக அன்னையின் குழுவினருடன் சுவாமி ராமகிருஷ்ணானந்தரும் பெங்களூர் சென்றார்.*

*பெங்களூரில் சுமார் ஒரு வாரம் இருந்துவிட்டு, அன்னை மீண்டும் சென்னைக்குத் திரும்பினார்.*

*சென்னையில் ஓரிரு நாட்கள் தங்கிய அன்னை ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ராஜமந்திரி, ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த புரி ஜகந்நாத் வழியாக, 1911-ஆம் ஆண்டு ஏப்ரல் 11-ஆம் நாள் கல்கத்தா திரும்பினார்.*